**செய்தி வெளியீடு எண்: 501** **நாள் : 13.10.2015**

**செய்தி வெளியீடு**

**<u>முதன்மைத் தேர்வுக்கு – (Main Examination 2015) மாணவர்கள் சேர்க்கை அறிவிப்பு</u>**

மத்திய தேர்வாணைக்குழுவின் **2015** ஆம் ஆண்டிற்கான முதன்மைத்தேர்வு பயிற்சிக்காக மாணவ/மாணவியர் சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவங்கள் **13.10.2015** முதல் **15.10.2015** வரை சென்னை **–28,** பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, காஞ்சி வளாகம், எண்: **163/1–ல்** அமைந்துள்ள அகில இந்திய குடிமைப்பணித்தேர்வு பயிற்சி மையத்தில் வழங்கப்படும்.

மாணவ/மாணவியர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெற்று அதன் அடிப்படையில் **16.10.2015** முதல் **17.10.2015** வரை சேர்க்கை நடைபெறும். முதன்மை தேர்வுக்கான பயிற்சிக்கு SC-92, SCA-18, ST-03, MBC-40, BC-54, BCM-07, DA-07, OC-04 என மொத்தம் **225** மாணவ/மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இப்பயிற்சி மையத்தில் பயின்றவர்கள் தவிர தமிழ் நாட்டைச் சேர்ந்த இதர பயிற்சி மையத்தில் பயின்ற மாணவ/மாணவியர்களும், எந்த பயிற்சி மையத்திலும் சேராமல் தனியே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதன்மைத் தேர்வுகள் தொடங்கும் வரை பயிற்சியளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் கட்டணமில்லா விடுதி மற்றும் உணவு வழங்கப்படும் மேலும் இப்பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ. **3000/–** உதவித் தொகை தமிழக அரசால் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும்.

மேலும், விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி முதல்வர், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை – **28.** தொலைபேசி எண் **044–24621475** இணையதள முகவரி **<u>www.civilservicecoaching.com</u>**

முதல்வர்
அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம்,
சென்னை – 600 028

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**